உ

சத்குருப்யோ நம:

துயரங்களிலிருந்து மீளுவது எப்படி?

விதியைவெல்வது எப்படி?



அருள்திரு சதாசிவ கிரி சுவாமிகள்

அவர்கள் நிகழ்த்திய

கட்டுரைச் சொற்பொழிவு

உ

மயிலாடுதுறை
திரு. கு.பாலகிருஷ்ண உடையார்

அவர்களுடைய மறைவின் முதலாம் ஆண்டு விழாவை ஒட்டி விழாவின் முதல் தினத்தன்று திருக்கோவிலூர் ஸ்ரீ ஞானானந்த தபோவனம், அருள்திரு சதாசிவ கிரி சுவாமிகள் அவர்கள் ஆற்றிய கட்டுரைச் சொற்பொழிவு.

கடவுள் வாழ்த்து.

உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்!
நிலவுலாவிய நீர்மலி வேணியன்!
அலகில் ஜோதியன் அம்பலத்தாடுவான்!
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்!

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோம் நமச்சிவாய புறமெனை போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சிவாய ஜய ஜய போற்றி போற்றி

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசும் சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கி குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திரு நாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ

பாலகனார்க் கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற

வளர்ச்சியும் உடையதாகக் காணப்படுகிறது. வெங்காயத்தின் குடும்பத்தைச் சேர்ந்தவைகளுக்கு தேய்பிறையில் வளர்ச்சி கூடுதலும் வளர்பிறையில் வளர்ச்சி குறைவுமாகக் காணப்படுகிறது. அது எப்படியானாலும் பரவாயில்லை. சந்திரன் இல்லையென்றால் பூமியில் எந்த ஸஸ்ஸிய வகைகளும் இராது, ஸஸ்ஸியங்கள் இல்லையென்றால் பூமியில் பிராண வாயு சிறிதளவும் இராது. பிராண வாயு இல்லாத நிலையில் பூமியில் விலங்குகளோ பறவைகளோ மனிதர்களோ உயிருடன் இருக்க முடியாது. பூமியில் இவ்வளவு செயல்களும் நடந்தேற சந்திரன் தன்னிலிருந்து வெளியேற்றிக்கொண்டிருக்கும் ச்க்தியே தான் காரணம் ஆக சந்திரனை எவ்வாறு ஜடவஸ்துவென்று கூற முடியும்?

இனி நம் உடலைப் பார்ப்போம் அது தனிப்பிட்ட நிலையில் ஜடம் தான். அதை இயக்குவதற்கு அதன் உள்ளே ஒரு சேதனன் இருந்தாக வேண்டும். இந்தச் சேதனனை நாம் ஜீவாத்மா என்று அழைக்கிறோம். இதேபோல் ஜடவஸ்துக்களை அதிஷ்டானமாகக் கொண்டு அதாவது இருப்பிடமாகக் கொண்டு உலகம் முழுதும் நிறைந்து நிற்கின்ற சைதன்னியமானது உலகத்தை இயக்கி வருகிறது. பூகோளத்தை அதிஷ்டானமாகக் கொண்டு அதில் பூமிதேவி என்று நாம் அழைக்கின்ற சைதன்னியப் பொருளானது பல காரியங்களையும் செய்து வருகின்றது. இதைப் போல் சந்திரன், சூரியன், சுக்கிரன், குரு, சனி, புதன், போன்ற எல்லா கோளங்களையும் நக்ஷத்திரங்களையும், அவைகள் வெளியேற்றிக் கொண்டிருக்கும் சக்தியின் அடிப்படையில் நம் சாஸ்திரங்கள் சேதனப் பொருட்களாகவே பார்க்கிறது. நவக்கிரஹங்களையும் நக்ஷத்திரங்களையும் ஆராதிப்பதற்கு நம் சாஸ்திரங்கள் கூறுவது இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் அல்லாது மூட நம்பிக்கையின் பேரிலல்ல.

சைதன்னியம் ஊடுருவி நிற்காத எந்த சிறு பகுதியும் உலகத்திலில்லை. ஒவ்வொறு ஜடவஸ்துவுக்கும் அந்தர்யாமியாக இருந்து கொண்டு ஒவ்வொன்றையும் இயக்கிக் கொண்டிருக்கும் சேதனனை நம் வேதங்களும் சாஸ்திரங்களும் அந்தந்த வஸ்துவிற்கு அதிஷ்டாத்ரு தேவதை என்று கூறுகிறது இந்தப் பட்டியலில் அடங்கியுள்ள தேவதைகள் தான் இந்திரன், அக்னி, யமன், வருணன், வாயு, சந்திரன் முதலானோர். இந்த தேவதைகள் அண்டத்தளவிலும் (Macro Cosm) பிண்டத்தளவிலும் (Micro Cosm) உள்ளனர். அதாவது ஸமஷ்டிப் பிரபஞ்ச அளவிலும்

வியஷ்டியாகிய ஜீவசரீரத்திலும் இவர்களெல்லாம் இருந்து கொண்டு உலகத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு இந்திரன் சமஷ்டியளவில் கிழக்கு திக்கில் இருக்கிறான். ஜீவ சரீரத்தில் புஜங்களில் இருக்கிறான். வருணன் மேற்குதிக்கில் சமஷ்டியளவில் இருக்கிறான். ஜீவ சரீரத்தில் ருசிபார்க்கும் நாக்கில் இருக்கிறான். இதுபோல் அண்டத்திலுள்ள எல்லா தேவதைகளின் சக்தியும் சிறிய அளவில் பிண்டத்திலும் இருக்கிறது. இவ்விதம் உலகத்திலுள்ள அத்தனை பொருட்களும் பூமி, சந்திரன், சூரியன் ஆகியோரின் ஈர்ப்புச் சக்தியைப் போல் ஒரு நுட்பமான சக்தியை தங்களின் தகுதிக்கேற்றவாறு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இதற்கு ஆங்கிலத்தில் Vibration என்று கூறுவர். இந்த Vibration அனுகூலமாகவும் விபரீதமாகவும் இடத்துக்கும் ஆளுக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கபடி அமையும்.

மனது நற்பண்புகளும் அன்பும் உடையதாக இருந்தால் ஆனந்தத்தை விளைவிக்கக்கூடிய அனுகூல சக்தியை (Pleasant Vibration) தனக்குச் சுற்றிலும் பரப்பிக் கொண்டிருக்கும். மனம் போட்டி, பொறாமை, துவேஷம், திருப்தியின்மை போன்ற குணங்கள் நிரம்பியதாக இருக்குமானால் ஆனந்தத்திற்கு மாறாக அமைதின்மை, துக்கம், பயம் இவைகளை விளைவிக்கக்கூடிய விபரீதச் சக்தியை (Unpleasant Vibration) தனக்குச் சுற்றிலும் பரப்பிக் கொண்டிருக்கும்.

இயற்கையில் சாத்வீக-ராஜஸ-தாமஸ குணங்கள் என்று மூன்று குணங்கள் உள்ளன. இந்த மூன்று குணங்களும் சேர்ந்து தான் உலகமே உருவாயிருக்கிறது. இதில் சத்வகுணம் ஒளிமயமானது. ஆனந்தமயமானது, நேசசக்தியை தனக்குச் சுற்றிலும் பரப்பிக் கொண்டிருக்கும் தன்மை வாய்ந்தது. தாமஸ குணம் இதற்கு நேர் மாறாக இருளடைந்தது. சோம்பல், தூக்கம், துக்கம் முதலிய தன்மை வாய்ந்தது. தனக்குச்சுற்றிலும் அதிருப்தியையும் துக்கத்தையும் பரப்பிக் கொண்டிருக்கும். ராஜஸகுணம் தற்பெருமை வாய்ந்தது. போட்டி பொறாமைக்கு மனதை எப்பவும் தூண்டக்கூடியது. இது திருப்தியின்மையையும் அமைதியின்மையையும் தனக்குச் சுற்றிலும் பரப்பிக் கொண்டிருக்கும் இயல்புடையது. சாத்வீகத் தன்மையை முக்கியமாகக் கொண்டு தேவர்களும், ராஜஸத்தன்மையை முக்கியமாக்கிக் கொண்டு அசுரர்களும், தாமஸத்தன்மையை முக்கியமாகக் கொண்டு பூத-பிரேத-பிசாசு வகைகளும் தோன்றியிருக்கின்றன. இதே போல்

சத்துவ குணத்திலிருந்து மனமும் ஞானேந்திரியங்களும் ரஜோ குணத்திலிருந்து பிராணனும் கர்மேந்திரியங்களும் தமோ குணத்திலிருந்து ஜடவஸ்துக்களாகக் காட்சியளிக்கும் தூலப் பிரபஞ்சமும் எல்லா ஜீவர்களுடைய தூல சரீரங்களும் தோன்றின.

உலகத்தில் எல்லா இடத்திலும் எல்லாப் பொருட்களிலும் இம்மூன்று குணங்களும் ஊடுருவியிருக்கிறது. ஆனால் ஒவ்வொன்றிலும் இந்த குணங்கள் ஏற்றத்தாழ்வுடன் காணப்படுகிறது. ஒரு சில செடி-கொடி-மரங்களில் சாத்வீகத் தன்மை மிகுந்துள்ளது. எடுத்துக்காட்டாக துளஸி, பச்சைப்பயறு, அரசு, வேம்பு, வில்வம், பூவரசு இவைகளைக் கொள்ளலாம். விலங்கினங்களில் முக்கியமாக பசுமாட்டை கொள்ளலாம். சாத்வீகத்தன்மை மிகுந்த பொருட்கள் பூஜைக்குரியவையென்று நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவைகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதால் நம் மனதில் ஆனந்தமும் அமைதியும் பெருகுகிறது. மனிதர்களிலும் இம்மூன்று குணங்களின் ஏற்றத்தாழ்வுக்கேற்ப பிரிவுகள் உருவாகின்றன.

சாத்வீகதன்மை மிகுந்தவர்கள் பொறி-புலன்களைக் கட்டுப்படுத்தி தவநெறியில் பெரும்பாலும் காலத்தைக் கடத்த விரும்புவார்கள். இவர்கள் தங்கள் உணவு, உடை பழக்க வழக்கங்கள், இப்படி எல்லாவற்றிலும் சாத்வீகத் தன்மை வாய்ந்த மனிதர்களுடனும் சுற்றுச்சுழலுடனும் தொடர்பு கொள்ள விரும்புவார்கள். அதிமானுஷர் பிரிவில் அதாவது மனிதர்களைக் காட்டிலும் சக்தி வாய்ந்தவர்கள் பிரிவில் தேவர்கள் சாத்வீகத் தன்மை மிகுந்தவர்கள். தேவர்களை ஆராதனம் செய்வதால் மனிதர்களுக்கு சாத்வீகத் தன்மை பெருகி அமைதியும் ஆனந்தமும் பெருகுகிறது.

இது எப்படி நேருகிறது என்று பார்ப்போம். சாத்வீகத் தன்மை பெருகப் பெருக மனது புலன்கள் வாயிலாக வெளி சென்று அலைந்து திரிவது குறைகிறது. சாத்வீகத்தன்மை திருப்தியையும் ஆனந்தத்தையும் கொடுக்கிறபடியால் மனது வெளியே ஓடும் தன்மையை விட்டு உள்நோக்குடையதாக மாறுகிறது. சத்துவம் பெருகிப் பெருகி சுத்த சத்துவ நிலை கைகூடுகிறபொழுது ஆத்மஞானம் உண்டாகிறது. மனம் புலன்கள் வாயிலாக வெளியே சென்று விஷயானந்தத்தைத் தேடி அலைந்து திரிவது கானலை நீரென்று எண்ணி மான்கள் அதை நோக்கி ஓடுவது போலாகும்.

ஓட ஓட தளர்ச்சி உண்டாகும், தாகம் அதிகமாகும், நீரோ கிடைக்கவும் போவதில்லை மான்கள் விஷயத்தில். அதைப் போலவே மனிதர்கள் விஷயத்தில் விஷயங்கள் நிலையற்ற வைகள். வாலிபப் பருவத்தில் அனுபவித்த அதே இன்பங்கள் மூப்பெய்திய நிலையில் புலன்களின் தளர்வினாலும் தேய்மானத் தாலும் துன்பங்கள் அளிப்பவைகளாக மாறிவிடுகின்றன.

உலகிலுள்ள எல்லா உயிரினங்களும் எப்பவும் ஆனந்த மாகவே இருக்க விரும்புகிறது. ஆனந்தம் தங்கள் ஸ்வரூபமேயாத லால் இது இயல்பாகிறது. மேலும் எல்லா உயிரினங்களும் பிற உயிரினங்களால் நேசிக்கப்பட விரும்புகிறது. தானும் பிற உயிர்களை நேசிக்கத்தான் முயற்சி செய்கிறது. தன் சுயநலத்தால் பிற உயிர்களை நேசிப்பதென்பது எப்பொழுதும் சாத்தியமில்லாமல் போய் விடுகிறது. இருந்தாலும் அடிப்படையாக பிற உயிர்களை நேசிக்கத்தான் விரும்புகிறது. பிறரின் நேசத்தையே எப்பவும் விரும்புவதிலிருந்து, தானும் பிறரை நேசிக்கவே விரும்புகிற தென்பது யுக்தியைக் கொண்டு நாம் தெரிந்து கொள்ளலாம். ஆக அன்புக்கு கட்டுப்படாதிருக்க எந்த பேய் பிசாசால் கூட முடியாது. சத், சித், ஆனந்தம், அன்பு இவை யாவும் பரமாத்மா வின் தன்மைகளாதலால் இந்தத் தன்மைகள் சம வியாப்தி உடைய வைகளாகிறது. அதாவது இவைகளில் ஒன்று இருக்கின்ற இடத்தில் மற்றவைகள் இருந்தே ஆக வேண்டும்.

கனவற்ற உறக்கத்தில் உலகமோ அதிலுள்ள கஷ்டங்களோ யாருக்கும் தெரிவதில்லை. தான் அந்நேரம் ஆனந்தமாக இருந்தது உள்ளங்கை நெல்லிக்கனி போல எல்லோருக்கும் தெரியுமென்பது திண்ணம். தூக்கத்தைத் தவிர மற்ற இரு நிலைகளாகிய கனவிலும் நனவிலும் இந்த ஆனந்தானுபவம் பாதிக்கப்படுகின்றது. கனவிலும் நனவிலும் பயம், துக்கம் போன்ற ஆனந்தத்தைப் பாதிக்கும் அனுபவங்களுக்கு நாம் ஆளாகிறோம். இதற்குக் காரணமென்ன? தூக்கத்தில் நம் மனமானது தன் வெளிச்செல்லும் நாட்டத்தைத் துறந்து உள்நாட்டம் உடையதாக மாறி ஆன்மாவுடன் ஒன்றியி ருந்தது, கனவில் மனமானது புலன்கள் வாயிலாக வெளியே செல்ல வில்லையென்றாலும் ஆனந்தமே ஸ்வரூபமாகியுள்ள தன் ஆன்மாவிடமிருந்து பிரிந்து விட்டது. உடனே அதற்கு துன்பமும் பயமும் உண்டாயிற்று. நனவில் புலன்கள் வாயிலாக வெளியே ஓடித்திரிந்து துன்பங்களுக்கு ஆளாகிறது. ஆக துன்பத்தின்

சம்பந்தமேதும் இல்லாமல் ஆனந்தானுபவம் உண்டாவதற்கு மனம் வெளிநாட்டம் சிறிதுமில்லாமல் ஆன்மாவுடன் ஒன்றியிருப்பதே காரணம் ஆகுமென்பது நமக்கு நிச்சயமாக தெரியவருகிறது. தன் ஸ்வரூபமே ஆனந்தமாக இருப்பதினால் எந்த வெளிப் பொருளையும் அண்டி நிற்காமல் தூக்கத்தில் மனதுக்கு ஆனந்தானுபவம் உண்டாகிறது. இதிலிருந்து முடிவாக நமக்கு தெரிய வருவது என்னவென்றால் ஆனந்தானுபவத்திற்கு உபாயம் விஷய சுகங்களை அனுபவிப்பதல்ல, மாறாக விஷயங்களிலிருந்து மனதை விடுவித்துக் கொண்டு உள்ளே திருப்பி ஆன்மாவுடன் ஒன்றுபடச் செய்வது மட்டும் தான் என்பதாகும். இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

மனதின் போக்கை நன்கு புரிந்து கொண்டு, அதை நாம், நம் விருப்பத்திற்கிணங்க, கட்டுப்படுத்தி நிறுத்தும் உபாயத்தை தெரிந்துகொள்ள வேண்டும். மனம் விழிப்புநிலையில் ஏன் புலன்கள் வாயிலாக வெளியே செல்லத் துடிக்கிறது? மனதின் ராஜஸ தாமஸத் தன்மைகளினால் தான் அது வெளியே செல்லத் துடிக்கிறது. ஆகையினாலே .மனதிற்கு படிப்படியாக சாத்வீகத் தன்மையை ஊட்டிவிட வேண்டும். உணவில் சாத்வீகம், தொழில்துறையில் நேர்மையை கடைப்பிடிப்பதினால் சாத்வீகம், உடை மற்றும் பழக்கவழக்கங்களில் எளிமையை கையாளுவதால் சாத்வீகம், நண்பர் விஷயத்திலும் சாத்வீகம் இப்படி எல்லாச் செயல்களிலும் சத்துவ குணத்தைச் சார்ந்து நிற்க மனதை பழக்கப்படுத்த வேண்டும். சாத்வீகப் பழக்கங்களுடன் ஜபம், பூஜை, நாமசங்கீர்த்தனம், தத்துவ ஆராய்ச்சி போன்ற பழக்கங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்படி பழக்கப் படுத்துவதால் விழிப்பு நிலையில் புலன்கள் வாயிலாக வெளியே ஓடித்திரியும் மனம் சிதறி ஓடாமல் ஒருமுகப்பட்டு நிற்க ஆரம்பிக்கும். ஒருமுகப்பட்ட மனம் பொருட்க ளிலிருந்தும் புலன் களிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு உள்ளே திரும்ப ஆரம்பிக்கும். இதற்கு யோகமார்க்கத்தில் பிரத்தியாஹாரம் என்று பெயர். பிரத்தியாஹாரத்திற்கு மேல் தாரணை, தியானம், சமாதி என்று மூன்று நிலைகள் உள்ளன. மனம் மேலும் மேலும் தூய்மை அடைவதற்கேற்ப இம்மூன்று நிலைகளும் கைகூடுகின்றது. சமாதியில் ஜீவத் தன்மை அறவே ஒடுங்கி விடுகிறது. சமாதி யிலிருந்து விழிப்பு நிலைக்கு வந்தாலும் மனதின் ஜீவத்தன்மை ஒடுங்கிவிட்டபடியால் சிவத்தன்மை மட்டும் எஞ்சி அதுவே

நிலைத்து நிற்கிறது. துயரங்களிலிருந்து நிரந்தரமாக விடுபடுவதற்கு இதுவே உபாயமாகும். இது நடைமுறைக்கு சாத்தியம் ஆகுமா என்ற ஐயம் எழக்கூடும். அதற்கு நடைமுறையை அனுசரித்துள்ள பாங்கிலேயே நாம் இப்பொழுது ஆராய்ச்சி செய்வோம்.

உலகத்திலுள்ள எல்லா நிகழ்ச்சிகளும் காரிய-காரணத் தொடர்புடையவையாகும். விஞ்ஞானம் கூறுவதென்ன? "Every action has got an equal and opposite reaction" அதாவது ஒவ்வொரு செயலுக்கும் துல்லியமான எதிர் விளைவுகள் உள்ளது என்று இதற்குப் பொருள். நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்பமும் துன்பமுமாகிய எல்லா நிகழ்ச்சிகளும் நம்முடைய பூர்வ கர்மங்களின் விளைவேயாகும். புண்ணியத்தின் விளைவு இன்பம், பாபத்தின் விளைவு துன்பம். முக்தி நிலையை அடையும் வரையில் சூஷ்ம சரீரத்தை விட்டுப் பிரியாத ஜீவாத்மா புதிது புதிதாக தூலசரீரங்களை ஒன்றுக்குப்பின் ஒன்றாக எடுத்துக் கொண்டே இருக்கும். இப்படி தூல சரீரங்களை மாறி மாறி எடுத்துக் கொண்டே போனாலும் சூக்ஷ்ம சரீரத்திற்கு எந்த பாதிப்பும். இல்லாமல் தொடர்ந்து நிலைபெற்ற வண்ணமே இருந்து வருகிறது.

நாம் இப்போதுள்ள விமானங்களில் Black Box கறுப்புப் பெட்டி என்று ஒரு கருவியிருப்பதை கேள்விப்பட்டிருப்போம். இந்த கறுப்புப் பெட்டியானது விமான ஓட்டியின் அறையில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இது அங்கு நடைபெறும் அனைத்து சம்பாஷணைகளையும் இதர ஓசைகள் என்னென்ன உண்டோ அவைகளையும் விமான ஓட்டி சிறிதும் உணராத நிலையில் ஒலிப்பதிவு செய்து விடுகிறது. விமானம் ஆபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்களில் கறுப்புப் பெட்டியை தனியாக கழற்றி அதில் பதிவாயிருக்கின்ற ஓசைகளையும் de-code செய்து விடுகிறார்கள். விமானம் என்னென்ன ஆபத்துக்கு உள்ளானாலும் கறுப்புப்பெட்டிக்கு ஒருசேதமும் ஏற்படாது.

இந்தக் கறுப்புப் பெட்டியைப் போலவே ஒவ்வொரு ஜீவனின் சூக்ஷ்ம சரீரத்துடன் ஒரு கருவி இணைக்கப்பெற்றுள்ளது. தூல சரீரம் மடிந்தாலும் சூக்ஷ்ம சரீரத்திற்கும் அதனுடன் இணைக்கப் பெற்றிருக்கும் இந்தக் கருவிக்கும் ஜீவன் முக்தி நிலை அடைவது வரையில் எந்த சேதமோ பாதிப்போ ஏற்படாது. ஒவ்வொரு ஜீவனும் செய்கின்ற புண்ணிய-பாப மயமான அனைத்துச்

செயல்களும் இந்தக் கருவியில், ஜீவர்கள் உணராத நிலையில், இயல்பாகவே பதிவாகிவிடுகிறது. ஈஸ்வரன் இந்தக்கருவியில் பதிவாயிருக்கும் புண்ணிய பாபங்களை சீர்தூக்கிப் பார்த்து அதற்குத் தகுந்தபடி ஒவ்வாரு ஜீவனுக்கும் இன்ப-துன்ப அனுபவங்களை கொடுத்துக் கொண்டு வருகிறான். இது சாஸ்திரங்களின் பொதுக் கருத்தாகும்.

சைவ சிந்தாந்தக் கருத்துப்படி ஈஸ்வரன் ஒவ்வொரு ஜீவனுக்கும் அந்தந்த ஜீவனின் முன் கர்மங்களுக்கு தக்கப்படி பலனளிப்பது மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஜீவனும் படிப்படியாக கூடுதல் மனத்தூய்மை அடைந்து முக்தி நிலை எய்துவதற்கு ஒவ்வொரு ஜீவனையும் ஊக்குவித்து உதவிபுரிகிறான் என்பதாகும். இது ஈஸ்வரனின் எல்லையில்லாத அன்புக்கும் காருணியத்திற்கும் பொருத்தமான செயலாகிறது. ஈஸ்வரன் ஆனந்தம், அன்பு, காருணியம் ஆகிய தன்மைகளை தன் உருவமாகக் கொண்டவனென்று வேதங்களும், புராண நூல்களும் வருணிக்கின்றன. இறைவன் ஜீவர்களனைத்தையும் தன்மயமாக்கி கொள்ளத் துடிக்கிறான். எப்படி வாயுமண்டலமானது எங்காவது Vaccum வாயுசூன்யமான இடம் உருவானால் அங்கே நுழையத் துடிக்கிறதோ அதைப்போலவே இறைவனும் ஜீவர்களுடைய சுயநலத்தினால் உருவான பாதுகாப்பு வேலியை உடைத்துக் கொண்டு அவர்களுடைய இருதய கமலங்களில் புகுந்து தன்னோடு நிரந்தரமாக ஒன்றுபடுத்திக் கொள்ளத் துடிக்கிறான். லலிதா ஸமஸ்ரநாமங்களுள் *"ஸாமரஸ்ய-யராயணா"* எனும் நாமமானது இக்கருத்தை முழுமையாகக் கொண்டிருக்கிறது. தன் குழந்தைகளாகிய ஜீவர்களை *"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து"* நிற்கின்ற இறைவனால் எப்படி துன்புறுத்தவோ கொடுமைகளுக்கு உட்படுத்தவோ இயலும்? சரி அப்படியானால் உலகிலுள்ள ஜீவ ஜாலங்களனைத்தும் தினசரி எவ்வளவோ துன்பங்களுக்குள்ளாவதை எப்படி விளக்குவது.

இதற்கு விடையளிக்கும் பாங்கில் நாம் உலக நடைமுறையை கவனிப்போம். தாயார் தன் குழந்தைகள் தவறு செய்யும் போது அவர்களைத் திருத்தும் பாங்கில் பலவிதத்தில் தண்டனையளிக் கிறாள். தண்டனை அளிப்பதைக் கொண்டு தாயாருக்கு குழந்தை களிடத்தில் துவேஷம் கற்பித்து விடமுடியுமா? குழந்தை தன் குணத்தை மாற்றிக் கொண்டு விட்டால் தாயார் தண்டனை

யளிப்பதை அந்நேரமே நிறுத்தி விட்டு அணைத்து முத்தம் கொடுப்பதில்லையா? இதைப் போலவே இறைவனும் ஜீவர்கள் தம்தம் தவறுகளை உணர்ந்து பச்சாதாபப்பட்டு, தங்களை இனி தவறுகளொன்றும் செய்யா வண்ணம் திருத்திக் கொள்ளும் பொருட்டு, துயரங்கள் அனுபவிக்கச் செய்து அதன் வாயிலாக அவர்கள் மனதை தூய்மைப்படுத்துகிறான். இறைவன் செயலுக்கு நாம் தண்டனை என்று பொருள் கொள்ளாமல் தூய்மைப்படுத்துதல் என்று மட்டும் பொருள் கொள்ள வேண்டும். இங்கும் இறைவனுக்கு பாகுபாடுள்ளது என்று நாம் கொள்ளக்கூடாது.

ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். யானை, பசு, எருமை, ஆடு இப்படி நான்கு விலங்கினங்களை அடக்கி நிறுத்துவதற்கு நாம் ஒரே மாதிரி கோலையா பயன்படுத்துவோம்? இல்லை. நான்கு இனத்திற்கும் நான்கு தினுசுக் கோலைத்தான் பயன்படுத்துவோம். யானையை அடக்கப் பயன்படுத்தும் கோலால் ஆட்டை அடித்தோமானால் அது செத்தே போய்விடும். ஆட்டுக்குப் பயன்படுத்தும் கோலால் யானையை அடிக்க முற்பட்டால் யானைக்கு உடம்பில் வலியொன்றும் தெரியாது. ஆக அடக்கப் பயன்படுத்தும் கோலிலும் முறையிலும் பாகுபாட்டை பார்க்காமல் அது அந்தந்த சந்தர்ப்பத்திற்கு பொருத்தமாக இருப்பதையே நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஆண்டவன் விஷயத்திலும் இப்படித்தான் கொள்ளவேண்டும். கறை,அழுக்கு, இவற்றை நீக்க நாம் துணிகளையும் பாத்திரங்களையும் இரஸாயனப் பொருட்களின் உதவியுடன் அடித்துத் துவைக்கிறோம். மண்ணையும் சாம்பலையும் வைத்துத் தேய்க்கிறோம். இச்செயலானது அப்பொருட்கள் கெட்டுவிட வேண்டும் என்கிற எண்ணத்திலா நாம் செய்கிறோம்? அவை மாசற்று இருக்கத்தானே நாம் இப்படிச் செய்கிறோம். வெண்பட்டிற்கு ஒப்பாக இருக்கிறது மனம். அதில் பாபங்கள் உருவத்தில் பல தினுசு கறைகள் படிந்திருக்கின்றன. அதை நீக்குவதற்கு ஆண்டவன் மனதைத் துயரக் கனலின் மேல் வைத்துப் புழுங்கி கண்ணீர் ஜலத்தில் முக்கித் துவைக்கிறான். மனம் தூய்மை அடைவதற்கு துயர அனுபவத்தைத் தவிர வேறு உபாயம் ஏதும் இல்லை, இருந்தால் கருணாமயனாகிய இறைவன் ஏன் துயர அனுபவத்தைத் கொடுக்கிறான்? விவேகம் படைத்த மனித இனம் இக்கருத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இனி நாம் துன்பம் வரும் பொழுது இயல்பாக என்ன செய்கிறோம் என்று பார்ப்போம். துயரம் வரும்பொழுது தன் ஊழ்வினையால்தான் துயரம் வந்தது என்று ஒரு பொழுதும் நாம் உணர்வதில்லை. மாறாக அந்நேரம் பிறரைப் பழிக்கிறோம். "அவனால்தான் நான் கெட்டேன். இவனால் தான் நான் கெட்டேன்" என்று கூறுகிறோம். பிறரைப் பழிக்க சில சமயம் வாய்ப்பு கிடைப்பதில்லை ஏனென்றால் தன் தவறுகளினாலே தான் துயரம் வந்தது என்ற உண்மை நிதர்சனமாக எதிரில் தெரிகிறது. அப்பொழுது நாம் என்ன செய்கிறோம்? "ஆண்டவனுக்கு கருணையே இல்லை சார். நான் இந்தத் துன்பத்தை அனுபவிப்பதற்கு எவ்விதத்திலும் தகுதியற்றவன்" என்று நமக்கு நாமே சான்றிதழ் கொடுத்துக் கொள்ள முனைகிறோம். பச்சாதாபப்பட்டு வருந்துவதற்கு மாறாக, துன்பங்களிலிருந்து விடுபடத் துடிக்கிறோம். ஆனால் அப்பொழுதும் மனதை ஆண்டவன் பக்கம் திருப்புவதில்லை. மாறாக உலக மக்களிடமிருந்தும் பொருட்களிடமிருந்தும் ஆறுதல் பெற நினைக்கிறோம். எவ்வளவு துயரம் வந்தாலும் நமக்கு "*தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி*" என்ற எண்ணம் வருவதே இல்லை.

திருவாதவூரடிகள் திருவாசகத்தில் கூறுவதைப் பார்ப்போம். "*திருச்சதக்கத்தில்*" ஏழாம் பகுதி "*காருணியத்திரங்கல்*" அதில் ஆறாவது பாடலைப் பார்ப்போம். "*இழித்தன் என்னை யானே எம்பிரான் போற்றி போற்றி. பழித்திலேனுன்னை என்னை ஆளுடைப் பாதம் போற்றி. பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி. ஒழித்திடில்வாழ்வு போற்றி உம்பர் நாட்டெம்பிரானே*" இதன் பொருளைப் பார்ப்போம். "நானிருக்கும் இவ்விழிந்தநிலைக்கு என்னை ஆளாக்கிக் கொண்டது நானொருவனேயன்றி வேறெருவரும் அல்லர். என் முந்தைய கர்ம வினைதான் இத்துயர நிலைக்கு காரணம். கர்மங்களுக்குத் தகுந்த பலனைக் கொடுக்கின்ற ஈஸ்வரனாகிய நீயோ, நான் அனுபவிக்கும் துயரத்தை எனக்கு ஒரு விதத்திலும் வரவழைத்த வனல்லன்" சரி. அப்படியானால் இத் துயரிலிருந்து எனக்கு விமோசனமே கிடையாதா என்றால் அதற்குப் பதில் வருகிறது. "*பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி*" நான் பிழை செய்ததினால் தான் இன்னிலைக்கு ஆளானேன் என்றாலும் இப்பொழுது என் பிழையை உணர்ந்து

பச்சாதாபப்படுகிறேன். இனி இப்பிழையை நான் செய்யவே மாட்டேன். நிகழ்ந்து விட்ட பிழையை நீ மன்னித்தருள்வாயாக. என்னுடைய, ஜீவாத்மாவாக வாழும் இவ்வாழ்க்கைக்கு நீ ஒரு முற்றுப்புள்ளி வைப்பாயாக. ஜீவாத்மாவாக இருப்பதினால் அன்றோ புலன்கள் இழுத்துச் செல்லும் வழியே சென்று நான் தவறிழைக்க நேருகிறது." நாம் அனைவரும் மேலே கூறி உள்ள கருத்திற்கிணங்க நம்மை அமைத்துக் கொள்வது மட்டும் தான் துயரங்களிலிருந்து மீளுவதற்கு உபயமாகும். நாம் திருந்திவிட்டால் துயரத்தைக் கொடுத்து ஆண்டவன் நம்மை ஏன் தண்டிக்கப் போகிறான்.

இங்கே சாஸ்திரங்களில் கூறியுள்ள நியாயத்தை அதாவது யுக்தியைப் பார்ப்போம். *"யதா லோகே ததா வேதே"* என்பது சாஸ்திரங்களின் கொள்கையாகும். உலக நடைமுறைக்குப் பொருத்தமான யுக்தியானது வேத விஷயத்திலும் பொருந்தும். வேத விஷயத்தில் பொருத்தமாயிருக்கிற யுக்தி இறைவன் விஷயத்திலும் பொருத்தமாகத்தானே இருக்க முடியும்.

நம் சித்தம் கல்லைப்போல் கடினமாக இருக்கிறது. அது கனியைப் போல் மிருதுவானால் மட்டும் தான் அதற்கு தெய்வீகத் தன்மை வாய்க்கிறது இறைவனின் குணங்களாகிய அன்பு, கருணை போன்ற பண்புகள் கனியைப் போல் மிருதுவான சித்தத்தில் மட்டும் தான் காணப்படுகிறது. ஜீவாத்மாவின் சுயநலமானது மனதை பாறையைக் காட்டிலும் கடினமாக்கியுள்ளது. துயரத் தீயில் வேக வேக இந்தக் கல் நெஞ்சிற்கு கனித்தன்மை வந்துவிடுகிறது. அதற்காக இறைவன் ஜீவர்களை துயரத்திற்கு ஆளாக்குகிறான். மனது கனிப்பக்குவம் அடைந்த உடன் இறைவன் தீயில் மனதை வேகவைப்பதை நிறுத்தி விடுகிறான். ஆயுள் தண்டனைக் கைதிகள் நல்ல சுபாவத்தை அடைந்து விட்ட காரணத்தால் பதினான்கு வருடங்கள் சிறையிலிருப்பதற்கு பதிலாக ஒன்பதோ, பத்தோ வருடங்கள் மட்டும் பூர்த்தியான நிலையிலே சிறையிலிருந்து வெளிவருவதை நாம் பார்க்க வில்லையா? மனிதனே இவ்வளவு கருணை காட்டும் பொழுது கருணைக் கடலாகிய இறைவன் மட்டும் வீணாக நம்மை தண்டிப்பானா? மாட்டான் என்பது திண்ணம்.

ஆண்டவன் ஜீவர்களுக்கு இரண்டு விதத்தில் கருணை புரிகிறான். சுகத்தையும் அஷ்ட ஐஸ்வர்யங்களையும் கொடுத்து

அருள் புரிவதற்கு அறக் கருணை என்பார்கள். சிவபெருமானுக்கு சுகத்தைத் கொடுக்கும்பொழுது மிருடன் என்று காரணப் பெயர். துயரத்தீயில் உள்ளத்தை வேக வைப்பதற்கு மறக்கருணை என்பார்கள். அந்த சந்தர்ப்பத்தில் சிவனுக்கு காரணப் பெயர்களாக ஹரன், உக்ரன், பீமன் என்றெல்லாம் நாமங்கள் அமைகின்றன.

ஜீவாத்மா பூரணத்துவம் எய்துவதற்கு இறைவனின் இவ்விரண்டு வகையான கருணையும் அவசியமாகிறது. இக் கருத்தை மாணிக்கவாசகர் எப்படிக் கூறுகிறார் என்று பார்ப்போம். அகவல் திருக்கோத்தும்பி, பாடல் பதினொன்று. *"வன்னெஞ்சக் கள்வன் மனவலியனென்னாதே, கன்னெஞ்சுருக்கிக் கருணையினாலாண்டுகொண்ட; அன்னந்திளைக்கும் அணிதில்லை அம்பலவன், பொன்னங்கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ."* ஆக இறைவன் நம்மை எந்த அனுபவத்திற்கு ஆளாக்கினாலும் அது உண்மையில் நம்முடைய நன்மைக்கே ஆகுமென்ற திடமான நம்பிக்கை வந்துவிட்டால் பிறகு எந்தந் துயரமும் துயரமாகத் தோன்றாது. துயரங்கள் வரும்பொழுது இத்துயரை அனுபவிக்க தான் எல்லா விதத்திலும் தகுதியுடையவன் தான் என்று ஒருவன் உணர்வானேயானால் அந்த நிமிடத்திலிருந்து இறைவனின் கருணைக்கு அந்த ஜீவன் பாத்திரமாகிறான். தவறை உணர்ந்து பச்சாதாபப்படுபவனை ஆண்டவன் மேலும் தண்டிக்கிறதில்லை. பகவத் கீதையில் ஒன்பதாவது அத்தியாயத்தில் பகவான் கூறுவது இக்கருத்தைத்தான் *"அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமனன்னிய பாக், ஸாதுரேவ ஸ மந்தவ்ய ஸ்ஸம்யக் வ்யவஹிதோ ஹி ஸ;" "க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா ஸஸ்வத் ஸாந்திம் நிகச்சதி."*

பாபத்தின் விளைவு துயரம். புண்ணியத்தின் விளைவு இன்பம் என்று மேலே கூறினோமல்லவா. ஒருவன் துயரங்களுக்கு நடுவில் தற்சமயம் இருக்கிறான். அவன் தற்பொழுதுள்ள தன் விதியை எப்படி மாற்றி அமைத்துக் கொள்ள முடியும்? ஒரு உதாரணம் வாயிலாக இக்கேள்விக்கு சுலபமாக விடையளித்து விடலாம். ஒருவருக்கு ஒரு தென்னந்தோப்பு இருக்கிறது. பல வருடங்களாக சொந்தக்காரர் தோப்பைப் பராமரிக்காமல் இருந்து விட்டார். உரம் வைத்துத் தண்ணீர் பாய்ச்சாததால் இப்பொழுது மரங்கள் மூளியாகக் காய் ஏதும் இல்லாமல் நிற்கிறது. இன்னிலையில் அவர் தன் தோப்பின் தோற்றத்தை மாற்றியமைத்து தென்னை களை காய்களுடன் கூடினவைகளாக பார்க்க விரும்பினால் அவர்

என்ன செய்ய வேண்டும்? அந்த நிமிடம் முதல் உரம் வைத்தல், நீர் பாய்ச்சுதல் போன்ற் சுச்ருஷைகளை செய்ய ஆரம்பிக்க வேண்டும். சரி. ஆரம்பித்து விட்டார். ஆனால் தென்னையின் உச்சியில் நாளைக்கே தேங்காய் உண்டாகி விடுமா? பராமரிப்பு வேலைகள் ஆரம்பித்து விட்டாலும் விளைந்த தேங்காய் பறிப்பதற்கு குறைந்த பக்ஷம் மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இம்மூன்று வருடக் காலத்திற்கு முன்னதாக அவர் பலன்பெற வேறு என்னென்ன முயற்சி செய்தாலும் பலன் கிட்டாதென்பது திண்ணம். இதற்கு என்ன காரணம்? ஒவ்வொரு கர்மாவிற்கும் பலன் கிடைப்பதற்கு ஒரு குறிப்பிட காலம் ஆகுமென்பதாகும். இதற்கு பரிணாம காலம் என்று கூறுவார்கள் ஆகையினாலே பரிணாம காலம் வரை காத்திருந்து தான் யாரானாலும் தன் விதியை மாற்றி அமைத்துக் கொள்ள இயலும்.

இதைப்போல் நம்முடைய இப்பொழுதுள்ள விதியை நாம் மாற்றி அமைத்துக் கொள்ள நினைத்தால் அதற்குத் தகுந்த முயற்சி செய்வதோடு பரிணாம காலம் வரை காத்திருக்கவும் வேண்டும். முயற்சி ஒருநாளும் வீண் போகாதென்பது இயற்கை யின் உறுதியான சட்டமாகும். காலம் வரும் வரை காத்திருக்கப் பொறுமையில்லாமல் ஒருவர் "*மதியால் ஆவதொன்றுமில்லை விதியை எவ்விதத்திலும் வெல்ல இயலாது.*" என்று கூறுவாராகில் அவருடைய அறிவின்மைக்குத்தான் அது சான்றாகுமே தவிர அது ஒருநாளும் உண்மையாகி விடாது.

பாபங்களின் விளைவாகிய துயரங்களிலிருந்து நம்மை விடு வித்துக் கொண்டு நம் விதியை மாற்றி அமைப்பதற்குப் புண்ணி யம் தொடர்ந்து செய்வதே உபாயமாகும். அப்படிச் செய்தாலும் பழைய பாப கர்மாவின் வேகம் தணிந்து இப்பொழுது செய்யப் படும் புண்ணிய கர்மாவின் பலன் கைக்கெட்டுவது வரை காத்தி ருந்தே ஆக வேண்டும். தான் பாதி தெய்வம் பாதி என்ற சொல்லுக்கிணங்க தன் கடமையைச் செய்து முடித்த பின் பலன் தரக்கூடிய இறைவனின் அருளை நாடி நின்றே ஆக வேண்டும். தன் கர்மாவை ஒழுங்காகச் செய்து முடித்து விட்டால் பலன் வந்துதானே தீர வேண்டும் என்று இறுமாப்புக்கு இடம் கொடுக் காமல் இறைவனருளை நாடி நிற்க வேண்டும். இறைவன் "கர்த்தும் அகர்த்தும் அன்னியதா வா கர்த்தும் ஸமர்த்த:" அதாவது ஸர்வ வல்லமை படைத்தவனாதலால் பலன் நாம் எதிர் பார்க்கும் நேரத்தில் கொடுக்காமல் அதை ஒத்திப்போடவும் இயலும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இவ்வாறு நம் முயற்சியாலும் இறைவனருளாலும், இரண்டும் சேர்ந்த நிலையில் மட்டும்தான் விதியை மாற்றி அமைத்துக் கொள்ள முடிகிறது.

"எல்லோரும் நன்றாயிருக்க வேண்டும்
இதற்கு ஈஸன் கணேசன் அருளல் வேண்டும்
எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டும்
இதற்கு ஈஸன் கிரீசன் அருளல் வேண்டும்"

மந்தஸ்மித முகாம்போஜம் மஹனீய குணார்ணவம்
மதுராபாஷிணம் சாந்தம் ஸர்வபூத தயாபரம்
பக்த வாத்ஸல்ய ஜலதிம் பரமானந்த விக்ரஹம்
ஞானானந்தம் ப்ரபன்னோஸ்மி நிர்மலஞ்ஞான ஸித்தயே.
ஓம் ஞானானந்தம் ஞானானந்தம் ஞானானந்தம்.

மங்களம் கிரி - ஜாமாத்ரே
கருணாம்ருத - வர்ஷிணே
பக்த - சித்த - நிவாஸாய
மாத்ரு - பூதாய மங்களம்.

மங்களம் சித்ஸபேஸாய
நித்ய - தாண்டவ - காரிணே
சிதானந்த - ஸ்வரூபாய
ஸிவா - காந்தாய மங்களம்.

மங்களம் குருவரியாய
ஸாந்த்ரானந்த - ஸ்வரூபிணே
ஞானானந்த கிரீந்த்ராய
ஞான - நிஷ்டாய மங்களம்.

ஞான சித்தி வினாயக மூர்த்தி கீ ஜய்
ஞான ஸ்கந்த மூர்த்தி கீ ஜய்
ராஜ ராஜேஸ்வரி பராசக்தி ஜகன்மாதா கீ ஜய்
நம: பார்வதீ-பதயே ஹர ஹர மஹாதேவா
ஸத்குரு ஸ்ரீ ஞானானந்த கிரி ஸ்வாமி கீ ஜய்
ஸிவனடியார்கள் திருவடிகளே ஸரணம் ஸரணம்.

மங்களம்.